**தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும் மாசற்றதுமான சமயவாழ்வு எதுவெனில், துன்புறும் அனாதைகளையும், கைம்பெண்களையும் கவனித்தலும், உலகத்தால் கறைபடாத படி தம்மைக் காத்துக் கொள்வதும் ஆகும். (யாக்கோபு: 1:27)**

புனித பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்க்கையில் அவருக்கும் ஒரு தொழுநோயாளருக்கும் இடையில் நடந்த சம்பவம் மிக சுவாராசியமான ஒன்றாகும். ஒரு நாள் அவர் குதிரையின் மீது சவாரி செய்து கொண்டிருந்த போது ஒரு தொழுநோயாளரை தெரு ஒன்றில் கண்டார். அவரை பார்த்த உடனேயே பிரான்சிஸின் மனதில் வெறுப்பும் கோபமும் வந்தது. ஆனால் ஒரு நிமிடம் அவர் அங்கு நிதானித்து அவர் இயேசுவோடு செய்து கொண்ட அன்பின் உடன் படிக்கையை நினைவில் கொண்டுவந்தார். தன்னிலை உணர்ந்தவராய் இறைவனில் இருந்தும் மற்ற சகோதர சகோதரிகளிடமிருந்தும் தன்னை பிரிக்கக்கூடிய அன்பில்லாத் தன்மையை நினைத்து வருந்தினார். குதிரையிலிருந்து கீழே இறங்கி, அங்கிருந்த அத்தொழு நோயாளருக்கு அருகில் சென்று அவருக்கு தேவையான பணத்தினைக் கொடுத்தார். அதோடு நில்லாமல் கட்டித் தழுவி ஒரு முத்தத்தையும் கொடுத்தார். குதிரையில் ஏறிய பிறகு திரும்பிப் பார்த்தால் அம்மனிதர் அங்கிருந்து மாயமாய் மறைந்துவிட்டார். பின்னர்தான் அங்கு வந்தது இயேசு என்பதை புரிந்து கொண்டார்.

இன்றைய உலகமானது அளவிட முடியாத அளவுக்கு பிரிவினை வாதத்தையும், நம்ப முடியாத அளவிற்கு பிறரன்பு அற்ற தன்மையையும் நாடுகளிடையே வெளிபடுத்துகின்றது. நம்முடைய நகரங்களில் கூட இத்தகைய பிரிவுகள் இருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். வீடில்லாத ஏழைகளும், வசதியற்றவர்களும், வசதியும், கல்வியறிவும் இருக்கும் மக்களை விட்டு விலகி நகரங்களின் ஒதுக்குப் புறங்களில் மற்றும் எல்லைகளில் இருக்கின்ற காலனிப் பகுதிகளிலும், சாக்கடைகளின் ஓரங்களிலும், வசிக்க தகுதியற்ற பல்வேறு இடங்களிலும் வாழும் நிலைக்குத் துரத்தப் பட்டுவிட்டனர். நிலங்களின் விலை வாசியை உயர்த்தும் நோக்கிலும், பணக்காரர்களும் வசதிபடைத்தவர்களும் மட்டும் வசிக்கும் வகையிலும், நடைபாதை வாசிகளும், வீடற்ற ஏழை மக்களும், நகரங்களை விட்டு துரத்தப்படுகின்றனர். சில இடங்களில் பிச்சையெடுப்பதை சட்டரீதியாக தடைசெய்து அம்மக்களை அங்கே பிழைக்க விடாமல் துரத்தி விடுகின்றனர். நாமும் கூட பல நேரங்களிலே ஏழை மக்களை அருகில் வைக்க தயங்குபவர்களாகவும், வசதிபடைத்தவர்களை புகழ்ந்து அவர்களோடு இணைந்து வாழ முயல்பவர்களாகவும் தான் இருக்கின்றோம். *நீங்கள் பளப்பளப்பான ஆடை அணிந்தவர்*

*மீது தனிக் கவனம் செலுத்தி அவரைப் பாத்து தயவு செய்து இங்கே அமருங்கள் என்று சொல்கின்றீர்கள், ஏழையிடமோ அங்கே போய் நில் என்றோ அல்லது என் கால்பக்கம் தரையில் உட்கார் என்றோ சொல்கிறீர்கள் (யாக்கோபு 2:3).* ஏழைகளுக்கும் நமக்கும் இடையே செயற்கையான ஒரு சுவரைக் கட்டியெழுப்பி நாம் நம்முடைய வாழ்க்கையை எளிமையானதாகவும், வசதியானதாகவும் வாழ முயற்சிசெய்கின்றோம். பல இடங்களிலே ஓரளவுக்கு வசதிபடைத்த நடுத்தர குடும்பத்தை சார்ந்தவர்கள் கூட இத்தகைய ஏழை மக்களை சந்திப்பதில்லை அவர்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பதும் இல்லை அவர்களோடு உரையாடுவதும் இல்லை. பல இடங்களிலே ஏழைமக்கள் தேவையான கட்டமைப்பு வசதியின்றி, சுத்தமான காற்றோ, உணவோ, குடிநீரோ இன்றி, முறையான கல்வியின்றி, நல்ல ஒரு வாழ்க்கையினை வாழக்கூடிய எடுத்துக் காட்டான மக்களின்றி, சரியான வழிகாட்டுதலின்றி உழன்றுக்கொண்டுதான் இருக்கின்றனர். சமூக அந்தஸ்து என்னும் குதிரையில் நாம் ஏறி அமர்ந்துகொண்டு நம்முடைய அன்றாட வாழ்க்கையிலும், நம்முடைய குறிக்கோளை அடையும் முயற்சியிலும் மட்டும் ஈடுபட்டுக்கொண்டு மிக எளிமையாக நாம் இந்த ஏழைமக்களை கடந்து சென்றுவிடுகின்றோம் இல்லையா?

நம்மை சுற்றியிருப்பவர்களிலே யார் ஏழைகள்? எத்தகைய சுவர்கள் நமக்கும் அவர்களுக்கும் இடையில் கட்டியெழுப்பப் பட்டுள்ளது? கிறிஸ்துவின் அன்பு என்னை என்ன செய்ய அழைக்கின்றது? கடவுளின் கண்பார்வையில் தூய்மையான மற்றும் தீட்டுப்படாத மதம் எது என்றால்: அனாதைகளையும். விதவைகளையும் அவர்களின் துன்ப காலங்களில் அரவணைப்பதில் ஈடுபடுகின்ற ஒன்றுதான்….என்றாவது ஒருநாள் என் வாழ்க்கையிலும் தேவையில் இருக்கின்ற ஒரு ஏழை வருவார் அவருக்கு நான் உதவுவேன் என்று அவர்களின் வரவுக்கு காத்துக் கொண்டு இல்லாமல் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு நாமாக சென்று அவர்களை சந்தித்து உதவிகள் செய்து, வசதியானவர்களுக்கும், அவர்களுக்கும் இடையில் இருக்கும் அந்த தேவையற்ற சுவற்றினைத் தகர்க்க முயல்வோம்.

திருத்தந்தை பிரான்சிஸ் ஒருமுறை மக்களைப் பார்த்து, “நீங்கள் தானம் செய்யும் போது அம்மனிதரின் கரங்களைத் தொட்டு தானமளிக்கின்றீர்களா அல்லது காசை தூக்கியெறிந்துவிட்டு செல்கின்றீர்களா?” என்று கேட்டார். துன்பத்தில் இருப்பவர்க்கு உதவுவது என்பது பணத்தையும் பொருட்களையும் மட்டும் தூக்கியெறிந்துவிட்டு செல்வது கிடையாது. மாறாக கிறிஸ்துவின் அன்பு என்பது நம்முடைய சகோதர சகோதரிகளின்

தேவைகளுக்காக அவர்களின் அருகில் சென்று அத்தேவையை உணர்வதும், அவர்களை அன்பு செய்வதும், அன்பின் வெளிப்பாடாக அவர்களுக்குத் தேவையானதைக் கொடுப்பதும் ஆகும்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுவினுடைய உதாரணத்தை எடுத்துக்கொள்ளலாம். நம்முடைய துன்பப்படும் நிலையைக் கண்ட அவர் விண்ணகத்திலிருந்து நாணயத்தை எடுத்து சுண்டிவிடவில்லை மாறாக தானே இறங்கிவந்து மனித உருவெடுத்து நம்மோடு இணைந்து வாழ்ந்து நமக்கு மீட்பை கொடுத்துச் சென்றார். நாமும் இறையேசுவின் கருணையிலே நம்பிக்கைக் கொண்டவராக இறைமகனின் அன்பானது நம்மை துன்பப்படுகின்றவர்களின் அருகில் கொண்டு சேர்க்கட்டும். வெறுமனே அவர்களோடு இருந்தாலும்கூட போதுமானது தான். இவ்வகையிலே நாம் நம்முடைய நம்பிக்கையை உண்மையுடனும், கடவுளுக்கு முன்னிலையில் தூய்மையான மற்றும் குற்றமற்ற வாழ்க்கையாக வாழவும் முயலுவோம்.

**புனிதரின் கூற்று:**

‘‘முன்பெல்லாம் தொழு நோயாளர்களோடு இருப்பது மட்டுமல்ல, மாறாக அவர்களை தொலைவில் காணும் போதே புனித பிரான்சிஸ் அசிசியாருக்கு வெறுப்பாகவும், கோபமாகவும் இருக்கும். ஆனால் இப்பொழுது சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் பொருட்டு…அவர்கள் இருக்கும் இடத்தை அடிக்கடி சென்று பார்ப்பார். பார்ப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களை கட்டியணைத்து அவர்களின் கைகளிலும் முகங்களிலும் முத்தமிடுவார்,’’ புனித. பொனவெந்தோ.

**வாழ்க்கைகாக:**

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவுக்காக உங்களுடைய ‘இயேசுவின் இளையோர்’ குழுவில் செயல் முறைத்திட்டம் ஒன்றை அமைத்து இன்று நாம் தியானித்தவைகளை உங்கள் வாழ்க்கையிலும், குழுவிலும் செயல்படுத்த முழு முயற்சியில் ஈடுபடுங்கள்.